# நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

## 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை

**அறிமுகம்**

ஆரம்பத்தில், 2018 ஆம் ஆண்டில் இவ்வலுவலகம் மேற்கொண்ட கடமைகள் , தொழிற்பாடுகளுடன் தொடர்பான விடயங்களை பற்றி விவரிக்கும் முன்னர் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (இதன்பின்னர் ஒம்புட்ஸ்மன் என குறித்துரைக்கப்படும்) ஆற்றவேண்டிய பங்கைப் பற்றி குறித்துரைக்கிறேன்.

கடந்த காலத்தில் ஒம்புட்ஸ்மனினால் அணுகப்பட்ட சட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தெளிவான விளக்கம் ஒன்றை பெறுவதற்கு அத்தகைய ஒரு பின்னணியானது உதவியாக அமையலாம். அதுமட்டுமல்லாது 2019 ஜனவரி 30 ஆம் திகதியன்று நான் ஒம்புட்ஸ்மனாக கடமைகளை பொறுப்பேற்றுள்ளேன் என்பதை குறிப்பிட விருப்புகிறேன். எனவே எனக்கு முன்னர் பதவி வகித்தவருடைய காலப்பகுதியில் இடம்பெற்ற விடயங்களையே நான் தற்போது அறிக்கையிடுகிறேன்.

**கடமைகளும் தொழிற்பாடுகளும்**

அரசாங்க அலுவலர்களால் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள். உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அதேபோன்ற ஏனைய நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் போது அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பிலான முறைப்பாடுகளை அல்லது சார்த்துரைகளை புலனாய்வு செய்து அறிக்கையிடும் பொறுப்பை கொண்டுள்ள நிருவாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகத்தை பாராளுமன்றம் தாபித்தல் வேண்டும் என இலங்கை குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 156 குறித்துரைக்கிறது.

அதற்கமைய 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் உருவாக்கப்பட்டு ஒம்புட்ஸ்மன் அலுவலகம் தாபிக்கப்பட்டது. அச்சட்டத்தில் ஒம்புட்ஸ்மனின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடிகள் விபரிக்கப்பட்டு, வரையறுக்கப்படுள்ளன. அதனைத் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து அடிப்படை உரிமைகள் மீறல்கள் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக ஒம்புட்ஸ்மன் பெறுவதற்கு ஏற்புடையதாக 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேலே கூறப்பட்ட சட்டம் திருத்தப்பட்டது. தக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அத்துடன் முறையீட்டுக்கு உள்ளான அரசாங்க அலுவலரின் தீர்மானம், பரிந்துரை, செயற்பாடு அல்லது தவிர்ப்பு சட்டத்திற்கு எதிரானதா, அநீதியானதா, கொடுமையானதா அல்லது முறையற்ற தற்றுணிவு பிரயோகமா என தீர்மானிப்பதற்கும் ஒம்புட்ஸ்மன் பணிக்கப்படுகிறார். அரசாங்க அலுவலரொருவரால் ஒரு நபரின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என அல்லது அத்தகைய அலுவலரினால் அநீதி ஏற்பட்டுள்ளது என புலனாய்வின் பின்னர் ஒம்புட்ஸ்மன் திருப்தியடையுமிடத்து, அதற்கமைய அவர் தீர்மானம் எடுப்பார்.

பாதிக்கப்பட்ட நபருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் ஒம்புட்ஸ்மன் சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலரின் செயற்பாடு தொடர்பில் பரிந்துரை வழங்கலாம், மீள் பரிசீலனை செய்யலாம், சீர்படுத்தலாம், இரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம். அத்துடன் அரசாங்க அலுவலர் சார்பாக நிறுவன தலைவரிடம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பரிந்துரை அமுலுக்கு வரும்வகையில் அவரினால் முன்மொழியப்படும் படிமுறைகளை அறிவிக்குமாறு கோரலாம்.

இலங்கை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக பதவிவகித்த திரு. சாம் விஜயசிங்க என்பவரே குடியரசின் முதலாவது ஒம்புட்ஸ்மன். இவர் சமர்ப்பித்த 1984 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் பின்வரும் முறையில் ஒம்புட்ஸ்மனின் கடமைகளையம், தொழிற்பாடுகளையும் விபரிக்கின்றார்.

" ஒம்புட்ஸ்மன் பாராளுமன்றத்தின் ஓர் அதிகாரி பாராளுமன்றம் பாரம்பரியமாகச் செய்யும் ஒன்றை முக்கியமாக நிறைவேற்றுவதே அவரது பொறுப்பு. அதாவது தனிநபர்களின் குறைபாடுகளுக்கு நிவாரணமளித்தலாகும். குறிப்பிடப்பட்ட குறைபாடுகளுக்கு நிவாரணமளிப்பதற்குப் பதிலாக இப்போது பாராளுமன்றம் பொதுவான சட்டங்களை உருவாக்குதல் தனது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிடுகிறது. அதிகாரவர்க்கத்துடனான தொடர்புகளில் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு பரிகாரமளிக்க ஒம்புட்ஸ்மனிடமும் நீதிமன்றத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் நீதிமன்றங்கள், ஒம்புட்ஸ்மன் ஆகிய மூன்று நிறுவனங்களும் அதிக கடமைகளுக்குள்ளாக்கப்படுவதால் இவற்றில் அகத்தொடர்புத் தேவை ஆராயப்படவேண்டும். மக்களும் அரசாங்கமும் அகத்தொடர்புறும் இடத்திலேயே ஒம்புட்ஸ்மனின் பங்களிப்பு இலங்கையில் தேவையாகின்றது. அதனால் ஒம்புட்ஸ்மனின் அரசியல் சட்ட நிலை மிகவும் சுவாரசியமுள்ளதாகின்றது."

அதற்கமைய, அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பளித்தல், அரசாங்க மற்றும் அதையொத்த ஏனைய நிறுவனங்களில் உள்ள அலுவலர்களின் செயற்பாடுகள் மூலம் ஏற்படும் ஏனைய அநீதிகளிலிருந்து மக்களை பாதுகாத்தல் என்பவற்றை உறுதிப்படுத்தல் ஒம்புட்ஸ்மனின் உயர்ந்த கடமையாக உள்ளது என்பது தெளிவாகிறது.மக்களுடைய உரிமைகளை பாதுகாக்கும் அதேவேளை அரசியலமைப்பின் உறுப்புரைகளில் மற்றும் சட்டவாக்கத்தை சட்டமாக்கும் ஏற்பாடுகள் மற்றும் அதனுடைய ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளினால் வெளியிடப்படும் பல்வேறுவகையான சுற்றறிக்கைகளில் உள்ளடக்கிய விதிகள் தொடர்பான விடயங்கள் சார்பாகவும் அரசாங்கத்தின் நிர்வாக கொள்கை முறையாக அமுல்படுத்தப்படுகிறதா என உறுதிப்படுத்தல் ஒம்புட்ஸ்மனின் கடமையாகும்.

## பரிந்துரைகள் மேற்கொள்வதில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகள்

இவ்வலுவலகத்தால் பெறப்படும் ஒவ்வொரு முறைப்பாடும் ஓர் தனி பதிவேட்டில் பதியப்படுகிறது. ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் விசேட இலக்கம் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் முறைப்பாடுகள் ஓய்வூதியம், காணி, அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்கள், பதவியமர்த்தல், பாடசாலை அனுமதி என்பன போன்ற விடயங்களுக்கு அமைய வகுக்கப்படுகின்றன. அவை குறிப்பிட்ட விடயங்களாக ஒதுக்கப்பட்டு இவ்வலுவலகத்தின் அலுவலர்களால் நிர்வாகிக்கப்படுகிறன. அவ்வலுவலர்கள் அரசாங்கசேவையின் "அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள்" வகுதியினரை சேர்ந்தவர்களாகும். முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டதும் அம்முறைபாடு ஏற்புடைய அரசாங்க முகாமைத்துவ உதவியாளருக்கு (விடய எழுதுநர்) அனுப்பப்படும். அதன்பின்னர் அவர்கள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் ஒரு கோவையை திறப்பார். விடய தலைப்பு தெரிவானது அலுவலகத்தின் பிரதம அரசாங்க முகாமைத்துவ உதவியாளரால் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பிட்ட முறைபாடு தொடர்பில் கோவை திறக்கப்பட்டதும் முறைபாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை எழுதுநர் சுருக்கமாக குறிப்பு எழுதுவார். அதன்பின்னர் அவர் நிர்வாக அலுவலருடன் முறைப்பாடு தொடர்பான தன்மையை விவாதிப்பார் பின்னர் இருவரும் ஒம்புட்ஸ்மனை சந்தித்து முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக அவருடைய ஆலோசனையையும் உதவியையும் பெற்றுக்கொள்வார்கள்.

மிகவும் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறும். அக்கலந்துரையாடலில் இணைக்கப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் பெறப்பட்ட முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயத்தை ஒம்புட்ஸ்மன் கவனமாக ஆராய்வார். மிகவும் முக்கியமான விடயம் முறைபாடு/சார்த்துதல் ஒம்புட்ஸ்மனின் நியாயாதிக்கத்திற்குள் அமைந்துள்ளதா என உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஆராயப்படும். இப்பிரச்சனை பற்றி தீர்மானிக்கும் போது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் ( இதன்பின்னர் சட்டம் என குறித்துரைக்கப்படும்) பிரிவுகள் 10, 11, மற்றும் 17 இல் காணப்படும் விடயங்களை ஒம்புட்ஸ்மன் கவனத்தில் கொள்வார். இம்முறைப்பாடு சட்டத்தின் எல்லைக்குள் இல்லாவிட்டால் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாமைக்கான காரணங்களை உள்ளடக்கி முறைபாட்டாளருக்கு உடனடியாக தெரியப்படுத்தப்படும்.

இம்மனு தொடர்பாக நடவடிக்கை தொடர்வதற்கு ஒம்புட்ஸ்மன் தீர்மானிக்கும் போது ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் சார்பாக பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொள்ளுவார். முறைப்பாட்டாளரின் கோரப்படும் நிவாரணம் மற்றும் யாருக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்ற மேலதிக தகவல்களை பெறுவது அவசியம் என ஒம்புட்ஸ்மன் கருதுவாரானால், அவ்வகையான தகவல் மனுதாரரிடமிருந்து கோரப்படும். இவ்வலுவலகத்தால் குறிப்பிடப்பட்ட தகவல்களை விட மேலதிகமாக தகவல்களை பெற்றுக்'கொள்வதற்காக விண்ணப்பதாரருக்கு விசேட படிவமொன்று (படிவம் ஒஎம்பி 01) அனுப்பப்படும். அதன்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தாமதமின்றி இவ்வழக்கை முடிவுறுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது எனினும் இம்முயற்சி முறைப்பாட்டின் இயல்பில் தங்கியுள்ளது.

பொதுவாக இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டதும் எவ்வலுவலருக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டதோ அலுவலர்களிடமிருந்து. கருத்தறிவிப்பு கோரப்படுகிறது. கருத்தறிவிப்பு அனுப்பப்பட்டதும் அதற்கு அவ்வதிகாரிகள் நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. மாறாக சில சந்தர்ப்பங்களில் கருத்தறிவிப்பை பெற்றுக்கொள்வதற்கு பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பவேண்டியிருந்தது. சிலவேளை ஒம்புட்ஸ்மனால் நியாயமான தீர்மானத்தை நிறைவேற்ற முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் குழுக்கள் இவ்வலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு குழுக்களும் தமது வாதங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கி இயற்கை நீதியின் விதிகளை அவதானித்து விசாரணை நடாத்தப்படுகிறது.

முன்னர் குறிப்பிட்டவாறு அடிப்படை உரிமை மீறல் அல்லது அநீதி ஏற்பட்டு-ள்ளது என நிரூபிக்கும் போதெல்லாம், ஒம்புட்ஸ்மன் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்குவதற்கு முயற்சி செய்வார். அந்நடவடிக்கையின் மூலம் நியாயமான தீர்மானமொன்றை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அவ்விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். ஒம்புட்ஸ்மன் தனது சகல முயற்சிகளிலும் தீர்வு காண முடியாதுபோனால், அவர் அப்பிரச்சனை தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டு குறித்த காலப்பகுதிக்குள் அத்தீர்மானத்தை அமுல்படுத்துமாறு பிரதிவாதிக்கு அறிவிப்பார். அக்குறித்த காலத்தினுள் எந்நடவடிக்கையும் மேற்கொள்ளாவிடின் ஒம்புட்ஸ்மன் தனது அறிக்கையின் பிரதியொன்றை சனாதிபதிக்கு அனுப்புவதுடன் சபாநாயகருக்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பப்படும். ஒம்புட்ஸ்மன் அலுவலகம் இதன்முன்னர் குறித்துரைத்த செயற்பாட்டை பின்பற்றுவதில் உறுதி கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்ட முறையில் மனுக்கள் தொடர்பிலான நடைமுறைகளை மேற்கொண்டு அதன்பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒம்புட்ஸ்மனின் தலையீட்டை நாடிய விண்ணப்பதாரர்களுக்கான நிவாரணங்கள் இவ்வலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது தொடர்பில் வேறுபட்ட பகுதிகளை உள்ளடக்கிய சில விடயங்களை தற்போது குறித்துரைப்பதன் மூலம் இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் மனுக்களின் சரியான இயல்பு மற்றும் வகைகள் தொடர்பிலான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

இலக்கம்- ஓஎம்பி/பி/2/10/1177 பெயர்- திரு.கே.பி.ஜயரட்ணபெரேரா

இவ்விடயத்தில், மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியமர்த்தும் நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட 25 ஏக்கர் பரப்பளவு உள்ள காணியில் 85 குடும்பங்கள் அரசாங்கத்தினால் குடியமர்த்தப்பட்டன. 25 ஏக்கர் காணியில் 05 ஏக்கர் காணியானது கித்துள்கல பொலிஸ் நிலையத்துக்காக கட்டடமொன்று நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. பொலிஸ் நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியை ஊடறுத்து செல்லும் ஓர் பாதையே அவ்வீடுகளில் வசித்துவரும் மக்கள் பயன்படுத்தி வந்தனர். அதன்பின்னர் அக்காணியில் அமைக்கப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட்டு வசித்துவரும் மக்கள் பயன்படுத்தி வந்தனர். அதன்பின்னர் அக்காணியில் அமைக்கப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட்டு வசித்துவரும் மக்கள் தமது பாதையை பிரயோகிப்பதற்கு பொலிஸ் இடையூறு செய்கிறார்கள் என முறையிட்டுள்ளார்கள், அப்பகுதி பொலிஸ் அத்தியட்சகரிடமிருந்தும், கேகாலை மாவட்ட செயலாளரிடமிருந்தும் அறிக்கை கோரப்பட்டு ஒம்புட்ஸ்மன் 2018 மார்ச் 10 ஆம் திகதியன்று முறைப்பாடு செய்த மக்களின் பாவனைக்காக 08 அடி அகலமான பாதையொன்று வழங்க வேண்டும் என பரிந்துரை வழங்கியது. அதற்கமைய பொலிஸ் மா அதிபர் அக்கோரிக்கையை ஏற்று ஒம்புட்ஸ்மன் தீர்மானித்தவாறு மக்கள் பாவிப்பதற்காக வீதி ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கினார்.

இலக்கம் - ஓஎம்பி/பி/2/10/1284 பெயர்- திரு இரேஷா மதுசங்கள் லியனகே

மனுதாரரொருவர் பத்தேக கிறிஸ்சேர்ச் மகளிர் கல்லூரியில் தரம் 1 இற்கு தனது மகளை அனுமதிப்பதற்கு விண்ணப்பித்தல் தொடர்பான விடயம் அம்மாணவியின் பாடசாலை தூரத்தை அடிப்படையாக கொண்டு அப்பாடசாலைக்கு அனுமதிக்கப்படவில்லை. தெரிவு பட்டியலில் 01 புள்ளி குறைவு காரணமாக அம்மாணவியின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் அம்மாணவியை அப்பாடசாலையில் அனுமதிப்பதற்கு அதிபர் இணக்கம் தொரிவித்திருந்தார். இத்தீர்மானம் 2018. மார்ச் 16 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்டது.

இலக்கம் - ஓஎம்பி/பி/2/7/318 பெயர்- திரு. டி.ஜி.கே. கருணாரட்ன

திரு.கருணாரட்ன என்பவர் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு 1 இல் அமர்த்தப்படவேண்டியிருந்தும், ஓய்வு பெறும்போதும் இலங்கை நிர்வாக சேவை தரம் 11- 1 இல் இருந்தார் என முறைப்பாடு செய்திருந்தார். இவ்வலுவலகம் அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளரை கருத்தறிவிப்பு கோரியிருந்தது. செயலாளர்,அம்முறைப்பாட்டாளருக்கு ஓய்வூதியம் கிடைக்கும் வகையில் அவரை சரியான தரத்தில் அமர்த்துமாறு அறிவித்திருந்தார். அதன்பின்னர், அவ்விண்ணப்பதாரி இலங்கை நிர்வாக சேவை வகுப்பு 1 இல் அமர்த்தப்பட்டு அதற்கமைய புதிய சம்பள நிலையில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது.

இலக்கம்- ஔம்பி/பி/2/11/27 பெயர்- திரு.எஸ்..மன்ஜு பிரசன்க

மனுதாரரொருவர் அவருடைய பாடசாலை காலங்களில் மரத்திலிருந்து விழுந்த காரணத்தினால் அங்கவீனரானார். அவர் அரசாங்கத்தினால் அங்கவீனருக்காக கொடுக்கப்படும் உதவிப்பணத்தை பெற்றுக்கொள்வதற்காக ஒம்புட்ஸ்மனின் உதவியை நாடியுள்ளார் ஒம்புடஸ்மன் விடயத்தில் தலையிட்ட பின்னர் பேருவல பிரதேச செயலாளர் 2018 மார்ச் 15 ஆம் திகதியிலிருந்து மாதாந்தம் 3000/- ரூபா உதவிப்பணத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளார்.

திரு.வெறகெர என்பவர் பேராதனை பல்கலைகழகத்தில் சிரேட்ட நிறைவேற்று அலுவலராக இருந்தும் வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு தகுதியிருந்தும் அவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்க மறுக்கப்பட்டதாக முறைபாடு செய்திருந்தார். ஒம்புட்ஸ்மனின் தலையீட்டையடுத்து வாகனத்தை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பதாரியின் பெயரில் அனுமதிபத்திரம் வழங்க பேராதனை பல்கலைக்கழகம் தீர்மானித்தது. இவ்விடயத்தை முறைப்பாட்டாளர் 2018.மே 3 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தார்.

## அவதானிப்புக்களும் ஆலோசனைகளும்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் கீழும் அதனைத்தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட திருத்தங்கள் கீழும் அளிக்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகித்து ஒம்புட்ஸ்மன் பரப்பெல்லையினுள் உள்ளடங்கும் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, கடந்த ஆண்டிலும் அரசியலமைப்பு 156 இல் குறித்துரைக்கப்பட்டவாறு அலுவலர்களின் செயற்பாட்டினால் மனுதார்க்கு அநீதி ஏற்பட்டது தொடர்பில், சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் பரிகாரம் வழங்குவதற்கு இந்நிறுவனம் முயற்சி எடுத்துள்ளது. நட்பு ரீதியில் தீர்க்க முடியாத விடயங்களை இவ்வலுவலகம் வழக்கின் இயல்புகளை அவதானித்து பரிந்துரை வழங்குகிறது. இவ்வலுவலகம் பிணக்குகள் தொடர்பில் சாத்தியமான அளவு மிக விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் தொலைபேசி மூலமும் கடிதத்தொடர்பு மூலமும் தொடர்பு கொண்டு பிணக்குகளை தீர்ப்பதற்கு பெரும் முயற்சி எடுத்துள்ளது. இவ்வாண்டின் மீளாய்வில், 730 முறைப்பாடுகள் சுருக்கமாக முடிவுறுத்தப்பட்டன. இரு கட்சிகளுக்கிடையிலான விசாரணையில் 16 முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன. மொத்தமாக 746 வழக்குகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. மிகுதி 479 முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைக்காக 2019 ஆம் ஆண்டிற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

நீதிமன்றம் தீர்க்கவேண்டிய சொந்த பிணக்குகள் விடயங்கள் ஒம்புட்ஸ்மனின் நியாயாதிக்கதிற்கு அப்பாற்பட்ட விடயங்களாகும். நிவாரணம் பெற்றுகொள்ளும் பொருட்டு தாமதமாக முறையீடுகளை முன்வைக்கிறார்கள்.விதிவிலக்கான சந்தர்ப்பம் தவிர்ந்த ஏனைய தாமதமாக அனுப்பப்படும் மனுக்களை இந்நிறுவனம் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகளை அதிமேன்மைதகு சனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி,கௌரவ அமைச்சர்களுக்கு அத்துடன் ஏனைய நிறுவனங்கள் முகவர்களுக்கு அனுப்பிவிட்டு எமது நிறுவனத்திற்கு பிரதிகளை முன்வைக்கிறார்கள். இத்தகைய நிலையில் அதிகாரிகள் தமது பெறுமதி மிக்க நேரத்தையும் வளத்தையும் செலவழித்து ஒரு பிரச்சனை தொடர்பில் பல்வேறுபட்ட தீர்மானங்கள் எடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதை அவதானிக்கலாம். அதன் காரணமாக ஏற்புடைய அரசாங்க அலுவலர்கள் அதேபோல் நிறுவனங்கள் மற்றும் ஒம்புட்ஸ்மன் அலுவலகம் அக்குறிப்பிட்ட தீர்வை அமுல்படுத்தும் போது பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரலாம். இச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு இவ்வலுவலகம் முறைப்பாடுகளின் பிரதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கமாட்டாது.

இன்னொரு விடயம், விசாரணை ஆரம்பிப்பதற்கு மனுதாரர்கள் போதியளவு தரவுகளை முன்வைப்பதில்லை என்பதை குறிப்பிடுகிறேன். அத்தகைய சூழ்நிலையில் அம்முறைப்பாட்டாளர் போதியளவு தகவல்களை இந்நிறுவனத்திற்கு வழங்குமாறு அறிவுறுத்தப்படும். எந்த அலுவலருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது மற்றும் ஏற்பட்ட உரிமை மீறல், எடுக்கப்படவேண்டிய தீர்மானம் போன்ற அவசியமான தகவலை விளங்கிகொள்வதற்கு ஏதுவாக ஔம்பி 1 படிவம் ஒன்று சகல முறைப்பாட்டாளர்களுக்கும் அனுப்பப்படும்.

தற்போது இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்களின் தன்மை தொடர்பில் அறியத்தருகிறேன். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தாம் விரும்பும் பாடசாலையில் அனுமதிப்பது தொடர்பில் முறையீடுகளை முன்வைத்துள்ளனர். தாம் சேவைக்கு தேவையான எழுத்து மூலமான பரீட்சையில் போதியளவு புள்ளியைப் பெற்றிருந்தும் அதிபர் தரத்தில் நியமிப்பதில் வேறுபாடுகள் காட்டுவதாக ஆசிரியர்களால் பெருமளவு எண்ணிக்கையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றங்கள், சம்பள ஏற்றங்கள், பதவியுயர்வுகள், சம்பள நிலுவைகள், படிகள், ஓய்வூதியங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது அநீதிகள் ஏற்பட்டுள்ளதாக அதிபர்களாலும், ஆசிரியர்களாலும் பெருமளவிலான எண்ணிக்கையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை குறிப்பிடுதல் அவசியமாகும்.

சில நிறுவனங்கள் அறிக்கைகள் அனுப்புவதில் மிகவும் மந்தமான நிலையில் செயல்படுவதை அவதானிக்கும்போது கவலைக்கிடமாகவுள்ளது. அந்நிறுவனங்களில் மகாவலி அதிகாரசபை, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் ஓய்வூதிய திணைக்களம் என்பன முக்கியமான நிறுவனங்களாகும். மகாவலி அதிகாரசபை மற்றும் ஓய்வூதிய திணைக்களம் போன்ற நிறுவனங்கள் தாம் மேற்கொண்ட தீர்மானத்தை மீளாய்வு செய்வதில் பிடிவாதமாகவும் தயக்கமும் காட்டுவதாக கூறப்படுகிறது. குறிப்பிடப்பட்ட விசாரணைக்காக இவ்வலுவலகத்திற்கு வருமாறு மகாவலி அதிகார சபை வலய பணிப்பாளருக்கு அறிக்கையிட்ட போது தீர்மானம் எடுக்கும் தகமையில்லாத காணி அலுவலரை அனுப்பியதன் மூலம் தங்களுடைய மனபாங்கை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்நிறுவனத்திடமிருந்து நிவாரணத்தை எதிர்பார்க்கும் உதவியற்ற பிரசைகள் இவ்வகையான நடத்தை மூலம் பாதிக்கப்படுகிறார்கள்.

ஓய்வூதிய திணைக்களத்திற்கு எதிராக பெறப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அலுவலர்கள் தமது அரச கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் காணப்படும் மனப்பாங்கே இந்நிலைக்கு காரணமாகும். அவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு மட்டுமல்லாது திறந்த மனத்துடன் நடுநிலமையாகவும் சேவையாற்றுவதில்லை என்பதை வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

கல்வி அமைச்சு, மாகண கல்வி அதிகாரசபைகள் எமது கடிதங்களை எதிர்பார்த்தவாறு கவனத்தில் கொள்வதில்லை. அவர்கள் செயற்பாட்டில் அலட்சியமாக இருப்பதால் அறிக்கைகள் பெற்றுக்கொள்வதற்காக பல நினைவூட்டல்கள் அனுப்பவேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் விதிகளில் பல்வேறு மாற்றங்களை அறிமுகப்படுத்தும் தற்போதைய தீர்மானத்தை பாராட்டுகிறேன்.

உள்ளூர் அதிகாரிகள் தமது எல்லைக்குள் சுற்றுப்புறத்தில் வாழும் குடியிருப்பாளர்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் வகையில் அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்களை கட்டியெழுப்பியவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதில் மிகவும் அலட்சியமாகவுள்ளனர். நல்ல விளைவுகளை கொண்டுவராத காரணத்தினால் இந்நிர்மாணங்களை தகர்த்தி நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வதிகாரிகளுக்கு பல பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

முறைப்பாடு ஒன்று தொடர்பாக விசாரணைகள் அல்லது புலனாய்வுகள் மேற்கொள்ளும் போதெல்லாம் பிரச்சனையை நீதி அல்லது நியாய உணர்வுடன் கவனம் செலுத்தாது தீர்மானம் அல்லது செயற்பாடு ஒன்றை நிரூபிப்பதற்கு முயல்வதில் அலுவலர்கள் நேரத்தையும் பிரயத்தனத்தையும் செலவு செய்துள்ளனர். தவறான செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் தனிநபர் மற்றும் பிரசைகளின் மீதான ஆரோக்கியமற்ற விளைவுகள் என்பவற்றில் சிரத்தை கொள்ளாது அலுவலர்கள் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை சரியாக நிரூபிக்காது சில வகையான தவறான செயலை அல்லது போலியான தீர்மானத்தை அதே வகையில் பேணுவதில் பிடிவாதமாக உள்ளார்கள். இத்தகைய நடத்தையின் மூலம் ஒருபோதும் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாது. உண்மையில் நிர்வாகத்தை களங்கப்படுத்துவதாக அமையும். மேலும் பிரசைகளால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கும் செவிமடுப்பதற்கும் அரச அலுவலர்கள் தயக்கம் காட்டுவரர்களானால் சிறந்த நிர்வாகம் களங்கப்படும்.

இறுதியாக குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்யும்போது இவ்வலுவலகமானது தமது பிரச்சனைகளை முன்வைப்பதற்கான நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பதுடன் எக்குழுவினருக்கும் சட்ட நிபுணர்களை இவ்விடயத்தில் உட்படுத்துவதற்கு இடமளிக்காது என்பதுடன் இந்நிறுவனம் அதிகார வர்க்க ஆட்சி முறைக்கு இடமளிக்காது என அவதானிக்கப்படுகிறது.

## புள்ளிவிபரப் பகுப்பாய்வு


2018 ஆம் ஆண்டில் இவ்வலுவலகம் புலனாய்வுக்கும் அறிக்கைக்குமாகப் பாராளுமன்ற பொது மனுக்கள் குழுவினால் அனுப்பப்பெற்ற 18முறைப்பாடுகளையும் மேலதிகமாக பொது மக்களிடமிருந்து நேரடியாக 1480 முறைப்பாடுகளையும் பெற்றுள்ளது. அத்துடன் மனித உரிமை ஆணைக்குழுவினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு எமது அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் 90 ஆகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் மீதமாகவுள்ள 616 முறைப்பாடுகள் முடிவுபெறுவதற்குள்ளன. எனவே இவ்வருட மீளாய்வின் கீழ் கையாள வேண்டிய மொத்த முறைபாடுகள் 2204 ஆகும்.

| **அட்டவணை 1 புள்ளிவிபர பகுப்பாய்வு** | | | |
|---|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புலனாய்வு செய்யப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மீதி | | 616 | |
| 2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த தொகை | | | |
| அ. முறைப்பாட்டாளர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றது | 1480 | | |
| ஆ. பொது மனுக்கள் குழுவினால் புலனாய்வுக்காகவும் அறிக்கைக்காகவும் அனுகப்பட்டது | 18 | | |
| இ. மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு மீண்டு எமது அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட மனுக்கள் | 90 | 1588 | |
| 2018 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | | | 2204 |
| 2018 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | | | |
| அ. நிவாரணம் வழங்ககூடிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | | |
| **1.** விசாரணையின்றிதீர்வுவழங்கப்பட்டது | 451 | | |
| **2.** பொருத்தமான செயற்பாட்டுக்கு ஏற்புடைய அதிகாரியை அணுகல் | 40 | | |
| **3.** சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் அனுகப்பட்ட அறிக்கையின் பின்னர் விலக்கப்பட்ட முறைப்பாடுகள் | 379 | | |
| **4.** அறிக்கை கோரப்பட்ட பின்னர் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | 109 | | |
| ஆ. சுருக்கமாக முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள் | | | |
| 1. சம்மானநிலையில்உள்ளநியாயசபைநிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட அதே முறையீடு என்பதால் புலனாய்வு செய்யாது நிராகரிக்கப்பட்டது | 85 | | |
| 2. விசாரணை மேற்கொள்வதற்கு போதுமான தகவல் கிடைக்கப்பெறாமை | 36 | | |
| 3.நிவாரணம் வழங்கக் கூடிய வழக்கு அல்லாதவை | 90 | | |
| 4. ஒம்புடஸ்மனின் சட்ட நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டவை | 109 | | |
| **5.** முறைப்பாடு செய்வதில் மேலதிக தாமதம் | 42 | | |
| **6.** நேரடியாக வேறுநிறுவனங்களுக்கு மனுக்களை அனுப்பிவிட்டு பிரதிகளை எமது நிறுவனத்திற்கு அனுப்பியமை தொடர்பான முறைப்பாடுகள் | 342 | | |
| **7.** நிதி ஒம்புட்ஸ்மன் மற்றும் காப்புறுதி ஒம்புட்ஸ்மன் போன்ற ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் | 26 | 1709 | |
| ஆ. கட்சிகள் முன்னிலையிலான விசாரணையின் பின்னர் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின்மொத்த எண்ணிக்கை | | 16 | 1725 |
| | | | |
| 2018.12.31 ஆம் திகதியன்று புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மிகுதி | | | 479 |

**மாதாந்த பகுப்பாய்வு**

2017 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மிகுதி முறைப்பாடுகளுடன் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைபாடுகளுமாக மொத்தமாக பெறப்பட்ட முறைப்பாடுகள் 2204 ஆகும். 2018 ஆண்டு டிசம்பர் மாதம் மிக குறைந்த எண்ணிக்கயிலான 76 முறைபாடுகள் பெறப்பட்டுள்ளன. மிகவும் அதிகமான எண்ணிக்கையிலான 187 .முறைப்பாடுகள் ஓகஸ்ட் மாதம் பெறப்பட்டுள்ளன.

**வரைபு - 01**



தாக்கல் செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் ஆண்கள் 1183 ஆகவும் பெண்கள் 405 ஆகவும் உள்ளன.

**அட்டவணை 2**


2018 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை பால் அடிப்படையில் வகைப்படுத்தல்

| மாதம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஜனவரி | 103 | 34 | 137 |
| பெப்ரவரி | 80 | 32 | 112 |
| மார்ச் | 77 | 38 | 115 |
| ஏப்பிரல் | 88 | 31 | 119 |
| மே | 103 | 25 | 128 |
| யூன் | 66 | 32 | 98 |
| யூலை | 134 | 50 | 184 |
| ஓகஸ்ட் | 152 | 35 | 187 |
| செப்டெம்பர் | 113 | 39 | 152 |
| ஒக்டோபர் | 121 | 44 | 165 |
| நவம்பர் | 82 | 33 | 115 |
| டிசெம்பர் | 64 | 12 | 76 |
| மொத்தம் | 1183 | 405 | 1588 |

**மாவட்டப் பகுப்பாய்வு**

2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் பெரும்பாலன எண்ணிக்கையில் கொழும்புமாவட்டத்தில் ( 272), அடுத்து களுத்துறை மாவட்டத்திலிருந்து (129 ) அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் ( 118 ) முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

வரைபு-02



**விடய பகுப்பாய்வு**

2018 ஆம் ஆண்டில் அலுவலக நியமனங்கள், பதவி உறுதிப்படுத்தல், தொழில் முடிவுறுத்தல், பதவியுயர்வுகள், சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவைகள்,பொலீஸ் அலுவலரினதும் அதேபோல் அரசாங்க அலுவலர்களினதும் அதிகார துஷ்பிரயோகம், செயல்புறக்கணிப்பு, ஓய்வூதியங்கள், ஊழியர் சேமலாப நிதிக்கொடுப்பனவுகள், அதிகாரமற்ற நிர்மாணங்கள், தொல்லைகள் என்பன தொடர்பான முறைப்பாடுகள் குறிப்பிடத்தகளவில் காணப்பட்டன.

அட்டவணை 3. விடயம் சார்பாக 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற அரசாங்க அலுவலர்களுக்கு எதிரான மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை

| | விடயம் | 2018 |
|---|---|---|
| 1 | காணி அனுமதிப்பத்திரம், அரச காணிகள் வழங்குதல் | 232 |
| 2 | பல்வேறு வகையானவை விடயங்கள் | 183 |
| 3 | சேவை உள்ளீர்ப்பு, ஆட்சேர்ப்பு, நியமனம்,பதவியில் உறுதிப்படுத்தல், முற்றேதியிடல் | 163 |
| 4 | பதவியுயர்வுகள், பதவி மூப்பு | 119 |
| 5 | சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவைகள் , படிகள் | 110 |
| 6 | ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் | 104 |
| 7 | இடமாற்றம் | 103 |
| 8 | தொழில் முடிவுறுத்தல், மீள அமர்த்தல், பதவி நீடிப்பு | 100 |
| 9 | பல்கலைக்கழகம், பாடசாலை அனுமதி பரீட்சை பெறுபேறுகள் | 94 |
| 10 | தாமதிப்பு, தகுதியின்மை, அலட்சியம், தத்துவ துஷ்பிரயோகம் | 93 |
| 11 | அதிகாரமளிக்கப்படாத கட்டட நிர்மாணங்கள் தொல்லைகள் | 59 |
| 12 | வேலைத்தளத்தில் துன்புறுத்தல் | 51 |
| 13 | வீதிகள் | 39 |
| 14 | நட்டஈடு, வறுமை, நிவாரணம், சமுர்த்தி | 32 |
| 15 | உரிமம் கட்டட அனுமதிப் பத்திரம் | 28 |
| 16 | ஊ.சே.நி, ஊ.ந.நி, மானியம் | 27 |
| 17 | கடன்கள் மீளளிப்புக்கள் மீள் அட்டவணைப்படுத்தல் | 17 |
| 18 | மின்சாரம் நீர் தொலைத்தொடர்பு துண்டித்தல் | 17 |
| 19 | அதிகாரம், செயல்புறக்கணிப்பு தொடர்பான பொலீஸ் துஷ்பிரயோகம் | 14 |
| 20 | சுனாமி உதவிகள் | 3 |
| | **மொத்தம்** | **1588** |

**அமைச்சு அரசாங்க நிறுவனங்களின் பகுப்பாய்வு**

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடுகளே மிகவும் அதிகமாக காணப்பட்டன. அவற்றில் காணி அனுமதிப்பத்திரம் மற்றும் மானியங்கள் வழங்கல் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளே பெரும்பான்மையாக் காணப்பட்டன. ஏற்புடைய சட்டத்தில் சொத்துரிமை சட்டம் பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தும் உடமை குடியிருப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவது சிறிய விடயமல்ல. காணி அனுமதி, மானியங்கள் வழங்குவதல் போன்ற விடயங்களில் பிரதேசசெயலகங்களில் தொழில் புரியும் சில அலுவலர்கள் வெளிப்படையக நடந்து கொள்ளவில்லை.

**அட்டவணை-4** 2018 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள் திணைக்களங்கள் அதிகாரசபைகள் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுலர்களுக்கு எதிராக முறைப்பாடுகளின் எண்ணிக்கை

| அமைச்சு திணைக்களம் அதிகாரசபை | எண்ணிக்கை 2018 |
|---|---|
| கல்வி மற்றும் உயர்கல்வி | 239 |
| ஏனைய நிறுவனங்கள் | 230 |
| அரசாங்க நிர்வாகம் | 223 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை | 215 |
| பாதுகாப்பு மற்றும் உள்ளக பாதுகாப்பு | 92 |
| சுகாதார மற்றும் சுதேச மருத்துவம் | 75 |
| கூட்டுத்தாபனங்கள்/அதிகாரசபைகள் (CPC,CEB,SLAA,RDA) | 68 |
| ஓய்வூதியம் | 63 |
| அரசாங்கசேவை ஆணைக் குழு ( மத்திய மற்றும் மாகாணம்) | 49 |
| போக்குவரத்து(SLCTB,CGR,CMV) | 47 |
| நீர்பாசனம் மற்றும் மகாவலி அதிகாரசபை | 42 |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 42 |
| விவசாயம் | 31 |
| தபால் மற்றும் மின்சார அதிகார சபை | 29 |
| நிதி | 24 |
| அரச வங்கிகள் | 22 |
| தொழில் | 18 |
| சமூகசேவை சமூத்தி ரொப்பியா(REPPIA) | 17 |
| தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைப்புச் சபை | 17 |
| கூட்டுறவு அபிவிருத்தி | 16 |
| காடுகள் | 10 |
| பதிவாளர் நாயகம் | 8 |
| பெருந்தோட்டங்கள் | 6 |
| நீதி | 5 |
| **மொத்தம்** | **1588** |

**அலுவலகப் பதவியணியிநர்கள்**

இவ்வலுவலகம் 32 பதவியணியிநர்களை அங்கீகரித்துள்ளது. ஆயினும் நிறுவன அமைப்பு வரைபடம் காட்டுவது போல் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வலுவலகத்தில் 20 அலுவலர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். ( வரைபடத்தை பார்க்கவும்)

**நிறுவன அமைப்பு வரைபடம்**

**ஒம்பூட்ஸ்மன்**

- மொழிபெயர்பாளர் வகுப்பு -I (சிங்களம்/ஆங்கிலம்)-01
- மொழிபெயர்பாளர் வகுப்பு -I (தமிழ்/ஆங்கிலம்)-01

நிர்வாகஅலுவலர்(தாபனம்) -01

- (அமுஉசே-வகுப்பு I) - 01
- (அமுஉசே- வகுப்பு II) -01
- (அமுஉசே-வகுப்பு III) -03
- த.தொ.உ (வெற்றிடம்) - 01
  - சாரதி ( வெற்றிடம்) - 02
  - அலுவலகப் பணியாளர் (வகுப்பு II) - 01
  - அலுவலகப் பணியாளர் (வகுப்பு III) - 03
  - அலுவலகப் பணியாளர் (வெற்றிடம்) - 02
  - சுகாதார பணியாளர் (ஒப்பந்தம்) - 01

நிர்வாகஅலுவலர்(மனு)வெற்றிடம் -01

- (அமுஉசேவகுப்பு I) - 01
- (அமுஉசவகுப்பு II )- 01
- (அமுஉச வகுப்பு III) - 08
- (அமுஉசே)(வெற்றிடம்) -03

## வருடாந்த வரவு செலவு திட்டம்

மீண்டெழும் செலவீனங்களுக்காக ரூபா 24,009,000.00 தொகையும் மூலதனச செலவாக ரூபா 1233000.00 தொகையுமாக 2018 ஆம் ஆண்டிற்கான மொத்த தொகை ரூபா 25,242,000.00 ஆகும். இவ்வருடத்திற்கான உண்மைச்செலவீனமானது ரூபா 25,033,000.00 தொகையும், சேமிப்பு ரூபா 209,000.00 தொகையுமாகும்.

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

01- நடைமுறை செயற்பாடுகள்

01 -பொது நிர்வாகமும் தாபன சேவைகளும்

| பொருள் | விவரணம் | 2018 தேறிய ஏற்பாடு | 2018 செலவீனம் |
|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவீனம்** | **24009** | **23869** |
| | **தனிநபர் வேதனாதிகள்** | **10170** | **10163** |
| 1001 | சம்பளங்கள் கூலிகள் | 7163 | 7162 |
| 1002 | மேலதிக வேலை நேரம் விடுமுறை கொடுப்பனவுகள் | 135 | 135 |
| 1003 | ஏனைய படிகள் | 2872 | 2866 |
| | **பிரயாண செலவுகள்** | **630** | **621** |
| 1101 | உள்நாடு | 30 | 25 |
| 1102 | வெளிநாடு | 600 | 596 |
| | **விநியோகங்கள்** | **940** | **896** |
| 1201 | காகிதாதிகள் அலுவலக உபகரணங்கள் | 565 | 562 |
| 1202 | எரிபொருள் | 260 | 227 |
| 1203 | உணவும் சிற்றுண்டி சீருடை | 115 | 107 |
| | **பராமரிப்பு செலவு** | **926** | **9** |
| 1301 | வாகனங்கள் | 569 | 569 |
| 1302 | பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 150 | 139 |
| 1303 | கட்டடம் மற்றும் நிர்மாணங்கள் | 207 | 195 |
| | **ஒப்பந்தம்** | **10858** | **10802** |
| 1401 | போக்குவரத்து | 10 | 8 |
| 1402 | தபால் தொலைத் தொடர்பு | 570 | 562 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 1488 | 1452 |
| 1404 | வாடகை மற்றும் உள்ளூர் வரிகள் | 7970 | 7970 |
| 1405 | ஏனையவை | 820 | 810 |
| | **இடமாற்றம்** | **485** | **484** |
| 1505 | சந்தா மற்றும் பங்களிப்பு நிதி | 350 | 350 |
| 1506 | சொத்து கடன் வட்டி | 135 | 134 |
| | **மூலதன செலவு** | **1233** | **1164** |
| | **மூலதனம் சொத்து கொள்ளல்** | **1183** | **1162** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுலவக உபகரணம் | 1183 | 1162 |
| | கட்டியெழுப்பும் இயலளவு | 50 | 02 |
| 2401 | பயிற்சி மற்றும் கட்டியெழுப்பும் இயலளவு | 50 | 02 |
| | **மொத்த செலவீனம** | **25242** | **25033** |
| | **மொத்த நிதி** | **25242** | **25033** |
| | நிதியிடல் உள்நாடு | 25242 | **25033** |

## முடிவுரை

ஒம்புட்ஸ்மன் முறைமையானது பிரசைகள் தமது துன்பத்தை தீர்த்து தமது அடிப்படை உரிமைகளை பாதுகாத்து அவர்களுடைய கௌரவத்தை மீட்டெடுத்து சனநாயக அமைப்பில் நம்பிக்கை ஏற்படும் வகையில் சுதந்திரமாகவும் பக்கசார்பற்றும் செலவின்றியும் பிணக்குகளுக்கு தீர்வு காணும் பொறிமுறை ஒன்றை அணுகக்கூடிய வகையிலான நீதிமன்றம் ஒன்றை வழங்குகின்றது. நவீன சமுதாயத்தின் அடிப்படை தேவையொன்றாக நல்லாட்சி முறை அமைகிறது. பொதுமக்களின் மிகச் சிறந்த நலன்களை முழு அளவில் கருத்தில் கொண்டு தடைகளின்றி நிர்வாகத்தை நடாத்துவதற்குரிய பாரிய அதிகாரங்களுடன் நிர்வாகத்தின் வழமையான காரியங்களை கொண்டு நடாத்துவதற்கு பொறுப்பாக அரசாங்கப் பொறிமுறைகள் கையளிக்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களானது சட்டங்கள் ஒழுங்குகள் இயற்கை நீதி மற்றும் சமத்துவம் என்பவை மீறப்படும் போது பிரயோகிக்கப்படுபவை என கருதப்படுதலாகாது.

வழமையான நிர்வாக நடவடிக்கையின் போது நிர்வாக துஷ்பிரயோகம் ஆளொருவருக்கு இழைக்கப்படுமாயின் அவ் அநீதியை கண்டறிவதற்கும் விசாரணை செய்வதற்கும் தவற்றைச் சீர்படுத்துவதற்கும் திருத்தியமைப்பதற்குமே ஒம்புட்ஸ்மன் அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது. அதிகாரங்களை தன்னிச்சையாக பிரயோகித்தல் அல்லது மறுத்தல் மற்றும் இலஞ்சம் அல்லது பக்கச்சார்பான முயற்சிகளுக்காக அரசாங்க கடமைகளை நிறைவேற்றல் தாமதப்படுத்தும் தந்திரத்தை உபயோகித்தல் போன்ற செயற்பாடே ஒம்புட்ஸ்மன் நிறுவனத்தினால் கருத்தில் கொள்ளப்படவேண்டிய அல்லது சீர்படுத்தபட வேண்டிய முக்கிய காரணியாகும்.

நீதிமன்றத்தின் ஊடாக குறைதீர்வு பெறுதல் மிகவும் செலவீனமான விடயமாகும். நீதிமன்றத்தை அல்லது நியாய சபையை அணுகுதல் பலன் அளிக்குமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. மேலும் ஒம்புட்ஸ்மன் கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், முறையாக பிரச்சனைகளை சுட்டிக்காட்டுவதற்கு அதிகாரம் உள்ளதாலும், நிர்வாக குறைபாடுகளை கவனத்தில் கொள்வதிலும் நீதிமன்றத்தை விட ஒம்புட்ஸ்மன் நிறுவனம் சிறந்ததாகவுள்ளது. ஒம்புட்ஸ்மன் நிறுவனம் பொதுவாக அணுகுவழிகள் குறைந்தளவில் கொண்டிருப்பதாலும் விசேடமாக பலவீனமாக வகுதியினருக்காக அமைக்கப்பட்டதாலும் பரிகாரத்தை நாடுவதற்கு அவர்களுடைய இயல்தகவை வலுவூட்டுவதற்கு உதவுவதாலும் மரபுரீதியான நீதிமன்ற முறைமையை விட ஒம்புட்ஸ்மன் நிறுவனம் நன்மைகளை கொண்டுள்ளது.

இவ்வலுவலத்தில் பேணப்படும் கோவையை ஆய்வு செய்தபோது, ஒம்புட்ஸமன் சட்டத்திற்கு அமைய, அச்சட்டத்தின் குறிகோளை அடைவது தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பது அவசியமாகும்.

சில அரசாங்க அலுவலர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் அல்லது விதிகளையும் அலட்சியம் செய்கிறார்கள் அல்லது அவர்கள் தமது விருப்பப்படி அவர்களுக்கு விளக்கம் கொடுக்கிறார்கள். இவை போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. அலுவலர்கள் தமது கடமையை நிறைவேற்றும் போது தவறான செயற்பாடுகளை புரிவதன் விளைவாக இயற்கை உரிமைகள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் மீறப்பட்டு இதன் மூலம் தனிநபருக்கு சட்டமுறையாக கொடுக்க வேண்டிய தொகையை வழங்காது மேலும் அவர்களின் மனத்தை புண்படுத்துகிறார்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

சில அலுவலர்கள் சமரசமாக பிரச்சனையை இணக்கம் செய்வதை வெறுக்கிறார்கள் அல்லது இணக்கம் தெரிவிக்க அவர்களால் முடியாதுள்ளது என்பதை நான் அவதானித்துள்ளேன். மேலும் சில அலுவலர்கள் பிணக்குகளின் விசாரணை சார்பாக விசேடமாக பிரச்சனைகளை சமாளிப்பதற்கு போதியளவு தகுதியற்றவர்களாக அல்லது இயலாதவர்களாக உள்ளனர் என்பது வெளிப்டையாக அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அலுவலர்கள் அநேகமாக நியாயத்தையும் சமத்துவத்தையும் அவமதிக்கும் மனோ நிலையிலுள்ளார்கள் அத்துடன் சட்டபூர்வமாக்கல் அல்லது அதிகாரதோரணை வழிவகை மூலம் அவர்களுடைய செயற்பாடுகளை சரியென நிரூபிப்பதற்கு முயல்கிறார்கள். இச்செயற்பாட்டினால் உள்ளன்போடு பிரச்சனையை தீர்க்காது முறைப்பாட்டாளர் ஒர் எதிரியாக கருதும் உளப்பாங்கு தோன்றும் அத்துடன் அலுவலக ரீதியாக தவறும் நிலையை ஏற்றுக்கொள்ள விருப்பமற்ற நிலையில் செயல்படுகிறார்கள் என்பதை அவதானித்துள்ளேன்.

சில பிரச்சனைகளும் கஷ்டங்களும் கோடிட்டு காட்டப்படும் அதேவேளை எனது கடமைகளை இலகுவாக நிறைவேற்ற கூடிய வகையில் அலுவலர்கள் திணைக்களங்கள் மற்றும் அதிகாரசபைகள் என்பவற்றின் மூலமான கணிசமானளவு ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றமையை நான் குறிப்பிடுதல் வேண்டும்.

அலுவலகமானது சகல பிரச்சனைகளுக்கு மத்தியில் கணிசமான அளவு எண்ணிக்கையிலான முறைப்பாடுகளை ஒழுங்குபடுத்தி நிர்வகித்துள்ளது. இவ்வலுவலகத்தில் பதவியணிகள் இன்னமும் நிரப்பப்படாதுள்ளது. அலுவலகத்தில் கணக்காளர் அல்லது கணக்கு பதியுநர் நியமிக்கப்படவில்லை. அலுவலர்கள் தமது சேவையை புரிவதற்கு படிகள் வழங்கப்படாமையால் இவ்வலுவலகத்தில் சேவை புரிவதற்கு தயக்கம் காட்டுவதை அவதானித்துள்ளேன என்பதை வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

இறுதியாக, இவ்வலுவலகத்தில் சேவைபுரியும் பணியாளர்களால் நிறைவேற்றப்படும் கடின உழைப்பு தொடர்பில் நான் பாராட்டாவிட்டால் நான் எனது கடமையை செய்யத் தவறியவன் ஆவேன். நாம் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு சகல பிரச்சனைகளுக்கும் முகம்கொடுத்து சேவைபுரிந்த எனது அலுவலக பதவியணியிநருக்கு அழ்ந்த நன்றியை தெரிவித்துக்கொள் கடமைப்பட்டுள்ளேன்.

நீதிபதி கே.டி.சித்ரசிறி

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்

(ஒம்புட்ஸ்மன்)